Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 299

திங்கட்கிழமை
22 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## இந்த ஆண்டில் இதுவரை ரூ. 3 பில். சொத்து பறிமுதல்

கொழும்பு, செப்.22
இந்த ஆண்டின் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி வரை நாடுமுழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனை 11

# அநுரகுமார ஆட்சியிலும் தொடரும் அடக்குமுறை

### சிவில் சமூகக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்ரெம்பர் 22

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனநாயக உரிமைகளை விரிவுபடுத்துவேன் என்று வாக்குறுதியளித்திருந்தபோதும், அவரது அரசாங்கத்தின் கீழும் இலங்கைப் பிரஜைகள் அடக்குமுறைக்கு உள்ளாகின்றனர் என்று உலகம் முழுவதும் குடிமக்கள் நடவடிக்கைகளையும் சிவில் சமூகத்தையும் பலப்படுத்தும் நோக்கில் செயற்படும் சிவில் சமூக கூட்டமைப்பு (சிவிக்கஸ்) சுட்டிக் காட்டியுள்ளது. 11



## கள்வர்களைப் பிடிப்பதுடன் நாடும் முன்னேறவேண்டும்

### முன்னாள் அமைச்சர் நவீன் தெரிவிப்பு



கொழும்பு, செப்.22
கள்வர்களைப் பிடிப்பது நல்ல விடயம் தான் என்றாலும், நாடும் அபிவிருத்தி செய்யப்படுவது முக்கியமானது என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் நவின் திஸாநாயக்க.
அஸ்கிரிய பீடத்துக்குச் சென்று ஆசிகள் பெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் 11

## பலஸ்தீனத்துக்கு ஆதரவு; ஐ.நா. வில் சொல்வார் அநுர

கொழும்பு, செப்.22
ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் நாளைமறுதினம் புதன்கிழமை உரையாற்றவுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பலஸ்தீனத்துக்கான இலங்கையின் ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தவுள்ளார்.
ஐ.நா. பொதுச்சபையின் 80ஆவது கூட்டத்தொடரில் பலஸ்தீன விவகாரம் பிரதான பேசுபொருளாக மாறவுள்ளது. பிரான்ஸ், 11

## அநுர ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு பில்லியன் டொலர் முதலீடு

கொழும்பு, செப்.22
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரச நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற பின்னர் அந்நிய நேரடி முதலீடாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதியான செலாவணி பெறப்பட்டுள் 11

*மட்டக்களப்பு*

## புதுக்குடியிருப்புப் படுகொலை; 35ஆவது ஆண்டு நினைவேந்தல்

மட்டக்களப்பு, செப்.22
மட்டக்களப்பு - புதுக்குடியிருப்புப் படுகொலையின் 35ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்றுமாலை பொதுமக்களால் கடைப்பிடிக்கப்பட்டது.
மட்டக்களப்பு மாவட்டத்தின் பழம்பெரும் தமிழ் கிராமமான புதுக்குடியிருப்பு கிராமத்தில் 1990ஆம் 11

## தியாகதீபம் திலீபனுக்கு பேதங்கள் மறந்து அஞ்சலி

யாழ்ப்பாணம், செப்.22
நல்லூரில் நடைபெற்றுவரும் தியாகதீபம் திலீபனின் ஆவணக் காட்சியத்தைப் பெரும் எண்ணிக்கையான மக்கள் பார்வையிடும் அதேநேரம், அரசியல் பிரமுகர்களும் அங்கு சென்று ஆவணக் காட்சியகத்தைப் பார்வையிட்டு, தியாகதீபம் திலீபனின் உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.
தற்போது தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், 11



## போராட்டத்தைத் தீவிரப்படுத்தும் மின்சாரசபை தொழிற்சங்கங்கள்

கொழும்பு, செப்.22
இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் மின்சாரசபை தொழிற்சங்கள் தமது போராட்டத்தின் அடுத்தகட்டமாக, நேற்று நள்ளிரவு முதல் கொள்முதல் மற்றும் கோள்விகோரல் செயன்முறைகளில் இருந்து விலகப்போவதாக அறிவித்துள்ளன. 11

## கச்சாயில் நடந்த விபத்தில் குடும்பப்பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப்.22
தென்மராட்சி, கச்சாயில் நேற்று நடந்த விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார். இந்த விபத்துச் சம்பவம் கொடிகாமம் - கச்சாய் வீதியில் நேற்று 11

**முச்சந்தி முரளி**

'அப்ப
ஆட்சிமாறினாலும்
இஞ்சத்த காட்சியள்
மாறேல எண்டு
எல்லாருக்கும்
தெரிஞ்சிட்டு கண்டியளோ'

## மின்கட்டணம் மீண்டும் டிசெம்பரில் உயரும்?

கொழும்பு, செப்.22
மின்சாரக் கட்டணம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திலிருந்து டிசெம்பர் மாதத்துக்குள் 6.8 சதவீதத்தால் உயரலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.
மின்சார சபைக்கு இந்தக் காலாண்டில் 7.83 பில்லியன் ரூபா நிதிச்செலவு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. கடந்த ஜூன் மாதத்துடன் 11

## மாகாணத் தேர்தலை நடத்துக!

### வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்கள் ஒருமித்த கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.22
தமிழ் மக்களின் இருப்பை உறுதிசெய்யும் மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்த தேர்தலை அரசாங்கம் விரைவாக நடத்தவேண்டும் என்று வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்கள், அதன்பின்னர் ஊடகங்களுக் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 21.09.2025 | திகதி 21.09.2025 | திகதி 21.09.2025 | திகதி 21.09.2025 | திகதி 21.09.2025 | திகதி 21.09.2025 | திகதி 21.09.2025 | திகதி 21.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4201 | சீட்டிழுப்பு இலக்கம் 1268 | சீட்டிழுப்பு இலக்கம் 0227 | சீட்டிழுப்பு இலக்கம் 2307 | சீட்டிழுப்பு இலக்கம் 5959 | சீட்டிழுப்பு இலக்கம் 1989 | சீட்டிழுப்பு இலக்கம் 0534 | சீட்டிழுப்பு இலக்கம் 0075 |
| ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கினம் கன்னி | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து L | ஆங்கில எழுத்து H | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கினம் கடகம் |
| | | | சுப்பர் இலக்கம் 15 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 04 32 73 78 | வெற்றி இலக்கங்கள் 07 26 32 37 | வெற்றி இலக்கங்கள் 4 6 1 3 | வெற்றி இலக்கங்கள் 02 28 36 57 | வெற்றி இலக்கங்கள் 5 0 6 0 8 7 | வெற்றி இலக்கங்கள் 25 32 38 57 | வெற்றி இலக்கங்கள் 6 0 8 7 | வெற்றி இலக்கங்கள் 05 21 40 46 |
| விசேட எழுத்து Y | | | | | விசேட எழுத்து D | | |

# மாகாணசபைகளைக் கைப்பற்ற ஒற்றுமை அவசியம்!

## செல்வம் எம்.பி. சுட்டிக்காட்டு

**வவுனியா, செப். 22**

**வடக்கு, கிழக்கு மாகாணசபை மாற்றுக் கட்சிகளின் அதிகாரங்களுக்குள் செல்கின்ற வாய்ப்பு ஏற்படும் பட்சத்தில் தமிழ்த் தேசியத்தைப் பற்றிப் பேசுகின்ற தமிழ்க் கட்சிகள் அத்தோடு கடையை மூடிவிட்டு செல்லும் நிலை ஏற்படும். எனவே எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து குறித்த தேர்தலில் பங்குகொள்ளவேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்று எல்லோரும் கோரிக்கைவிடுகின்ற இந்தச் சந்தர்ப்பத்திலே அதிகாரப் பரவலாக்கலின் ஊடாக மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்று இந்தியாவும் ஐ.நா. சபையிலே கோரிக்கையை முன்வைத்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலில் எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து குறித்த தேர்தலில் பங்குகொள்ளவேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையிலே ஒற்றுமை இல்லாமை என்பதனை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் படிப்பினையாகக் கற்றுக் கொண்டோம். தமிழ் மக்கள் விரக்தியுடன் ஒற்றுமையான சூழலை எதிர்பார்த்து இருக்கின்றனர். எம்மிடையே ஒற்றுமை இன்மையினாலேயே புதிய நபரைப் புதிய அரசை தெரிவு செய்யவேண்டும் என்ற ரீதியிலேயே நாடாளுமன்றத் தேர்தலிலே தமிழ்மக்கள் வாக்களித்திருந்தனர்.

இதன் காராணமாகவே முன் எப்போதும் இல்லாதவகையிலே வடக்கு- கிழக்குப் பகுதிகளில் தேசியக் கட்சிகளின் பிரதித்துவம் உருவாகியது. எமது செயற்பாடுகள் வெறுமனவே பேச்சளவில் காணப்படுமேயானால்எமது மாகாணசபை நிச்சயமாக மாற்றுக் கட்சிகளின் அதிகாரங்களுக்குள் செல்கின்ற வாய்ப்பு ஏற்படும்.

அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியத்தைப் பற்றிப் பேசுகின்ற தமிழ்க் கட்சிகள் அத்தோடு கடையை மூடிவிட்டுச் செல்லும் நிலை ஏற்படும். எங்களுடைய மக்களுடைய எதிர்காலம், இனப் பிரச்சினை, எமது மண் பறிபோகாமல் இருக்கவேண்டும் என்றால் அதற்காக ஒன்றுபடவேண்டும். எனவே ஒற்றுமையாக தமிழ் மக்களுடையஎதிர்பார்ப்பை நிறைவு செய்கின்ற கட்சிகளாக இருக்க வேண்டும் - என்றார். (ச-110)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 21.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0667 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| T | 6 7 7 7 9 2 |

**Super Ball** DLB

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 21.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | 2933 | Y | 35 52 57 60 |

**சனிதா** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 021.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | G | 43 44 52 78 | 5094 |

**SASIRI** DLB

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 21.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0775 | 16 20 29 |

**லக்ன ராசி** DLB

| திகதி | தினம் | | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 21.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | மேஷம் | 28 53 55 59 | 4645 |

**KAPRUKA** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 21.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | V | 14 | 18 26 31 45 | 2109 |

**அத கோடிபதி** DLB

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 21.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | R | 13 21 41 74 | 2759 |

# புறக்கோட்டையில் தீ விசாரணைக்குக் குழு

கொழும்பு,செப்.22

புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள மின்சாதனக் கடையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்துக் குறித்து விசாரிக்கக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவுக்குப் பொதுப் பாதுகாப்புத்துறைப் பிரதி அமைச்சரான வழக்கறிஞர் சுனில் வட்டகல தலைமை தாங்குகிறார். தீயை அணைக்கவும், அருகிலுள்ள கட்டடங்களுக்குத் தீ பரவாமல் தடுக்கவும் சுமார் 15 தீயணைப்பு இயந்திரங்கள் மற்றும் ஒரு விமானப்படை ஹெலிகாப்டர் என்பன பயன்படுத்தப்பட்டன. (ச-இ)

# தவறான பாதையில் அரசாங்கம் பயணம்

*தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு*

கொழும்பு, செப். 22

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது தவறான வழியில் பயணித்துக்கொண்டிருக்கின்றது என்று முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் கவலையில் உள்ளனர். வாழ்க்கைச்சுமை அதிகரித்திருக்கின்றது. அரசின் பயணம் தவறு என்பதையே இது வெளிப்படுத்துகின்றது.

இறுதிமூச்சு இருக்கும்வரை அரசியல்வாதிகளால், அரசியலை விட்டுச்செல்ல முடியாது.

எதிரணிகளின் வேலைத்திட்டம் என்னவென்பது பற்றி அவதானித்துக்கொண்டிருக்கின்றேன் - என்றார். (ச-44)

# மின் ஊழியர்கள் போராட்டம் நாளைமறுதினம் முடிவு

கொழும்பு,செப்.22

இலங்கை மின்சாரசபை ஊழியர்களின் எதிர்காலத் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் நாளைமறுதினம் தீர்மானிக்கப்படும் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கும், மின்சாரசபைத் பிரதானிகளுக்கும் இடையில் மின்சாரசபைத் தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் 25 அமைச்சுகளின் செயலாளர்களும், மூன்று தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். எனினும் இலங்கை மின்சார சபை மறுசீரமைப்புக்குப் பொறுப்பான பணிப்பாளர் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தமையால், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சார சபைத் தொழிற்சங்க உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். அதனால் தீர்க்கமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்தநிலையில் எதிர்கால தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் நாளை மறுதினம் தீர்மானிக்கப்படும் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இலங்கை மின்சாரசபையின் மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# அதிபர் நியமனத்தில் முறைகேடு; சிவசேனை அமைப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 22

கிளிநொச்சியிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் வடமாகாணக் கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட முறைகேடான அதிபர் நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிவசேனை அமைப்பு இன்று திங்கட்கிழமை வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் அலுவலகத்துக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

இதுதொடர்பில் இலங்கை சிவசேனை சிவத்தொண்டர் .ஶ்ரீந்திரன் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கையில்,

இந்த முறைகேடான அதிபர் நியமனம் தொடர்பில் வடமாகாண ஆளுநருக்கும் பிரதம செயலாளருக்கும் இலங்கை சிவசேனை முறைப்பாட்டைச் செய்திருந்தது.

எனினும் பொருத்தமான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கமைய பொருத்தமான தரம் 1 அதிபரை நியமிக்கக்கோரியும் முறைகேடான முறையில் பொருத்தமற்ற அதிபர் நியமனம் செய்த கல்வி அமைச்சின் செயலாளருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தக்கோரியும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை நீக்கினால் ஆட்சிக்குப் பேரழிவு

எச்சரிக்கிறார் ஹக்கீம்

**கொழும்பு, செப்.22**

**தேர்தல் முறைமைகளில் தேவையற்ற திருத்தங்களை முன்வைத்து, சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை நீக்க நினைத்தால், எதிர்காலத்தில் ஆட்சியமைக்க எதிர்பார்த்துள்ளவர்களுக்கு பேரழிவை ஏற்படுத்தும். இதற்கு இடமளிக்கக்கூடாது. எனவே எதிர்க்கட்சிகள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எச்சரித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வரலாற்று ரீதியில், ஐக்கிய தேசி யக் கட்சியுடன் இணைந்து முக்கியமான தீர்மானங் களை எடுத்து அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பயணித்த கட்சியாகும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமது கட்சிக்கு வாக்களிக்காவிட்டால், அவற்றுக்கு நிதி ஒதுக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி அநுர பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார். இது மிகவும் அபாயம் மிக்க சர்வாதிகாரத்தை நோக்கிய பயணமாகும்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் புறந்தள்ளியுள்ள அரசாங்கம், தேர்தல் முறைமையில் கைவைத்துள்ளது. எம்மால் முன்வைக்கப்பட்ட தேர்தல் முறைமையின் காரணமாகவே, 3 சதவீதமாகக் காணப்பட்ட ஜே.வி.பி.க்கு உள்ளூராட்சிமன்றங்களில் பிரதிநிதித்துவம் கிடைத்தது.

அந்த முறைமை இல்லாதொழிக்கப்பட்டால், நீங்கள் எதிர்க்கட்சிக்கு வரும்போது அது எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேர்தல் முறைமைகளில் தேவையற்ற திருத்தங்களை முன்வைத்து, சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை நீக்க நினைத்தால் பேரழிவை ஏற்படுத்தும் - என்றார். (க-இ)

நடப்பாண்டில்

## 1,843 விபத்துகள் 1,960 பேர் பலி!

கொழும்பு, செப். 22

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் வாகன விபத்துகளில் ஆயிரத்து 960 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஜனவரி 1 முதல் செப்ரெம்பர் 17 வரை நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் இந்த மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் காலகட்டத்தில், 1,843 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளன. (ச-இ)

இருவாரங்களில்

## சட்டவிரோத மீன்பிடி: 78 மீனவர்கள் கைது

கொழும்பு, செப். 22

கடந்த இரண்டு வாரங்களில் சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 78 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மீனவர்களுடன், 35 டிங்கி படகுகளும், பல நாள் மீன்பிடிப் படகு ஒன்றும் பறிமுதல்செய்யப்பட்டுள்ளன. இந்தச் சந்தேகநபர்கள் திருகோணமலையைச் சுற்றியுள்ள கடலோரப் பகுதிகளிலும், காரைதீவு முதல் நிந்தவூர் வரையிலான கடற்பகுதியிலும், நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின் போது கைதாகியுள்ளனர் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது. (ச-இ)




## திலீபன் நினைவில் குருதிக்கொடை!

யாழ்ப்பாணம், செப்.22

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்து தியாக தீபம் திலீபனின் நினைவாக நடத்தும் குருதிக்கொடை முகாம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை யாழ்.பல்கலைக்கழக மாணவர் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

'உயிர் கொடுத்த உத்தமனுக்காய் உதிரம் கொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் இந்தக் குருதிக்கொடை முகாம் இடம்பெறும். குருதிக்கொடையாளர் பங்கேற்று உதிரக்கொடையளிக்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-41-66)

## 2025 சாதாரணதரப்பரீட்சை ஒன்லைனில் விண்ணப்பங்கள்

கொழும்பு, செப். 22

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் செப்ரெம்பர் 18ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 9ஆம் திகதிவரை இணையம் வழியாக ஏற்றுக்கொள்ளப்படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அனைத்துப் பாடசாலை விண்ணப்பதாரிகளும் தமது பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும்.

தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் நேரடியாக, உரிய வழிமுறைகளைப் பின்பற்றி இணையவழி விண்ணப்பப் படிவங்களை தமது தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி விண்ணப்பிக்கவேண்டும். தேசிய அடையாள அட்டை இல்லாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது பொறுப்பாளரின் (தாய் அல்லது தந்தை) தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்திப் பதிவு செய்து விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic ஆகியவற்றுக்குச் சென்று விண்ணப்பம் தொடர்பான வழிமுறைகளைப் படித்து அதற்கிணங்க விண்ணப்பங்களைச் சரியாகச் சமர்ப்பிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)




## குறைஞ்சாலும் பிரச்சினை கூடினாலும் பிரச்சினை

எதிலையும் போட்டி இருக்கலாம், ஆனால் பொறாமை இருக்கக்கூடாது. என்டாலும் இஞ்ச போட்டி என்டு வந்திட்டாலே அப்பிடியே எல்லாருக்கும் பொறாமையும் வந்திடுது. அதால அடுத்தவையை விழுத்திறதுக்காக என்னவேணுமெண்டாலும் செய்யிற மனோநிலையும் கனபேரிட்ட பரவிட்டுது. இப்பிடி ஆளாளுக்கு நடக்கிற பொறாமைப் போட்டியில கடைசியில சனங்களுக்குத் தான் பாதிப்பு என்டதையும் அவை யோசிக்கிறேலை. சரி, இப்ப விசயத்துக்கு வருவம். நாட்டில பொருளாதார நெருக்கடி வரேக்க, எல்லாச் சாமான்களின்ர விலையும் உச்சத்துக்குப் போனது. இப்ப நாட்டின்ர நிலைமை சீரா வந்திட்டுது என்டு எல்லாரும் சொல்லுகினம். ஆனால் ஏறின விலையெல்லாம் திரும்பக் கீழ வரேலை என்டது சனத்துக்குத்தானே தெரியும். இன்னும் சொல்லப் போனால், பொருளாதார நெருக்கடி காலத்தில இருந்ததை விடவும் விலையேறிப்போட்டுது என்டதுதான் உண்மை.

அப்பிடி இன்னும் விலையேறிக்கொண்டிருக்கிற ஒரு பொருள் அரிசி. அதுவும் தமிழாக்கள் கூடுதலாச் சாப்பிடுற குத்தரிசி விலை இறங்கவே மாட்டன் என்டு அடம்பிடிக்குது. என்னதான் நெல்லு விளைஞ்சாலும் கூட, அரிசி விலைமட்டும் ஏன் இறங்கேலை என்டு ஆரும் யோசிக்கிறேலை. இத்தனைக்கும் சம்பா அரிசியை மாதிரி சிவப்பரிசியை கொழும்புக்கொம்பனியள் பெரிசா வாங்கிறதில்லை. ஏனென்டால் அங்க குத்தரிசி பெரிசா ஓடாது. அதால அவையள் சம்பாவைத்தான் தேடி வாங்குவினம். சிவப்பரிசியை இஞ்ச உள்ள மில்காரர்தான் கட்டுவினம். அப்பிடிச் சிவப்பரிசியைத் தேவையானளவுக்கு வாங்கின மில்காரர் இப்ப ஒரு வேலை செய்யினம். தாங்கள் மலிவா நெல்லை வாங்கி கட்டி வைச்சுப்போட்டு, இப்ப நெல்லு வாங்கப்போற தங்கட போட்டி மில்காரருக்கு நட்டம் வாறமாதிரி விலையை ஏத்தி விடுகினமாம். இப்ப நெல்லு ஒரு மூடை 8800 ரூபாவில இருந்து 9 ஆயிரம் ரூபா வரைக்கும் போகுது. ஆனால் ஏற்கனவே தேவையானளவு நெல்லைக் கட்டி வைச்சிருக்கிற மில்காரர் என்ன செய்யினமெண்டால், நெல்லை வைச்சிருக்கிறவையிட்ட போய் "முந்தி நாங்களும் 9 ஆயிரத்துக்குத்தான் எடுத்தம். இப்ப 10 ஆயிரம், 11 ஆயிரம் என்டு போகுது. நீங்க நெல்லை வைச்சிருங்கோ. வாறகிழமை வந்து எடுக்கிறம்" என்டு சொல்லி ஆசையைக் கூட்டுகினம். ஆனால் அப்பிடிச் சொல்லிப் போட்டு அவையள் நெல்லை வாங்கப் போகமாட்டினம்.

இதொண்டும் தெரியாமல், நெல்லைக் கட்டவெண்டு புதிசாப் போற மில்காரருக்கு "இப்ப மூடை 10 ஆயிரம் போகுது. வேணுமெண்டால் எடுங்கோ. இல்லாட்டி முந்திக் கட்டின மில்காரர் அடுத்தகிழமை வருவினம். நாங்கள் அவையிட்ட குடுக்கிறம்" என்டு நெல்காரர் சொல்லுகினம். அவையளிலையும் பிழை இல்லை. கூடக் காசுக்கு வித்தால் லாபம்தானே. ஆனால் வேணுமெண்டே விலையை ஏத்திக் கூத்துப்பாக்கிற சில மில்காரரால, மற்ற மில்காரர் இப்ப பத்தாயிரம் படிதான் நெல்லைக் கட்டுகினமாம். அப்பிடிப் பத்தாயிரத்துக்கு நெல்லை வாங்கி, அரிசியாக்கினா, ஒருகிலோ குத்தரிசியின்ர விலை 300 ரூபாவுக்குக் கிட்ட விக்கவேணுமாம். இல்லாட்டி நட்டம்தான். எல்லா மில்காரரும் தங்கட லாபத்தைத் தானே பாப்பினம். அதால இனிமேல் ஒரு கிலோ குத்தரிசியை 300 ரூபா குடுத்துத்தான் சனங்கள் வாங்க வேண்டிய நிலை வரப்போகுது. இதை நிப்பாட்டவேணும் என்டால், விவசாயியளும், சனங்களும் பாதிக்காமல் இருக்க உரியவை நெல்லுக்கு சரியான விலையை நிர்ணயிக்கோணும். இல்லாட்டி இப்பிடி சில மில்மாபியாக்கள் வைச்சதே சட்டமாப் போடும் கண்டியளோ.

padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். இலாபம் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**கடகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள்ஏற்படும். எதிர்பார்த்தபணம்கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. மற்றவர்கள் உதவி செய்வார்கள்.

**சிம்மம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். பணியின் காரணமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**கன்னி:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவும், திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும். சுபநிகழ்ச்சி தொடர்பான முயற்சியைத் தவிர்க்கவும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகம் கிடைப்பதுடன், அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்:** சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும், திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்ப விஷயமாக சிலருக்கு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரும். சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**மீனம்:** மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்படும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். அனுகூலம் ஏற்படும்.

# பராசக்தியைப் பலவடிவங்களில் பூசிக்கும் பெருவிழா நவராத்திரி

மதுரகவி. காரை. எம்.பி. அருளானந்தன்



நவராத்திரி பெண்களின் சக்தியை, பெண்களின் பெருமையை, பெண்களின் திறமையை, பெண்களின் வழிபாட்டுத்தன்மையை அடையாளங்காட்டும் காலமாகும். அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாய், சச்சிதானந்த சொரூபியாய் எதற்கும் உள்ளிருப்பவளாய் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவளாய் விளங்குபவளே அம்பிகை.

**புரட்டாதி மாதத்தில் அம்பிகை துஷ்டர்களை அழித்தாள்**

புரட்டாதி மாதத்தில் அட்டமி திதியில் துஷ்டர்களை அழித்தாள் எனவே இவள் துர்க்கை, சண்ட முண்டனை சம்ஹாரம் செய்தாள் எனவே இவள் சாமுண்டி, குரு என்ற அசுரனை அழித்ததால் இவள் கானராத்திரி என்றும் மகிடனை அழித்ததால் மகிசாசுரமத்தினி இவ்வாறாக அம்பிகையின் பெயர்கள் ஆயிரம் இருக்கின்றன.

**சக்தி தத்துவம்**

சக்தியின் தத்துவம் நான்கு வகைப்படும். நம்மைப் பெற்ற தாய், நமக்குப் பால்தந்த பசு, எம்மைத் தாங்கிக் கொண்டிருக்கும் பூமி நம்மைக் காப்பாற்றிக்கொண்டிருக்கும் சக்தி. சக்தியும், சிவனும், விஷ்ணுவும் ஒரே பரமசத்தியத்தின் மூன்று ரூப பேதங்கள்தான் அம்பாள் என்ற சக்தி மற்ற இரண்டு பேரோடும் பிரிக்கமுடியாமல் சம்பந்தப்பட்டிருக்கிறாள். ஒருத்தருக்கு பத்தினியாகவும், இன்னொருத்தருக்கு சகோதரியாகவும் இருக்கிறாள். இந்த மூவரும் ஒரே பரம்பொருள் ஆவர். எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருக்கின்ற சக்தி, சிவம் என்றும் அதுவே பலவாகத் தெரிகிறதற்குக் காரணமான சக்தி அம்பாள் அல்லது விஷ்ணு என்றும் புரிந்துகொள்ளலாம்.

**பராசக்தியை பலவடிவங்களில் பூசிக்கும் விழா நவராத்திரி**

பராசக்தியை பல வடிவங்களாகப் பூசித்து விழா நடத்தி வருகின்றோம். பெண்களுக்காகவே நடத்தப்படும் விழாவாக நவராத்திரி விழா திகழ்கிறது. முதல் மூன்று நாள்களில் பார்வதி தேவியையும், நடு மூன்று நாள்களில் லட்சுமி தேவியையும் இறுதி மூன்று நாள்களில் சரஸ்வதி தேவியையும் முறையே வழிபடும் பத்தாம் நாள் விஜயதசமி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிவருகின்றோம். சகல தேவதைகளின் சக்தியிலிருந்து தோன்றியதே ஜோமயருபிணி அருள்மிகு அஷ்ட தசபுஜ மகாலட்சுமி துர்க்கை. மூன்று சக்திகளும் அடங்கிய இந்த மூல துர்க்கையை வழிபடும் மரபு இந்துக்களிடையே நிலைத்து நிலவிவருகின்றது.

**சக்தியின் வியாபகம்**

அசுரர்களின் அதிபதியாக இருந்து மகிஷாசுரன், இந்திராபதி தேவர்களை போரில்வென்று இந்திர பதவியைக் கைப் பற்றித் தேவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். அவர்கள் பிரம்மதேவன் தலைமையில் சர்வேஸ்வரனிடம் சென்று முறையிட கோபம் கொண்ட ஈசனது முகத்தினின்றும் மற்றும் அருகில் நின்ற மகா விஷ்ணு பிரம்மதேவன் இருவரிடமிருந்தும் தேஜஸ் கூடிய ஒளி தோன்றிய ஒளியும் கலந்து ஒரு பெண் உருவமாகத் தோன்றியது. ஈசனது ஒளி அவளது முகமாக மாற, இயமனது அம்சம் அவனது கேசமாகத் தோன்றி அதில் சூரியதேவன் தன் கிரணங்களை நிரப்பினான். விஷ்ணுவின் தேஜஸ் அவளது கைகளாக மாறியது. சந்திரனது ஒளி அவனது மார்பகங்களாகவும், இந்திரனது ஒளி அவனது மெல்லிய இடையாகவும் வருணனது அம்சம் அவளது தொடையாகவும், முழங்கால்களாகவும் உருவாகி நிற்க பூமியின் அம்சம் அவளது பிருஷ்டமாகவும் மாறின. பிரம்மனது ஒளியினால் உருவான அவளது இரு பாதங்களில் சூரியனது அம்சம் கால் விரல்களாகி நின்றன. குபேரனது அம்சம் அவளது மூக்காகவும் உருவாகியது. பிரஜாபதியின் ஒளியினால் அவளது பல்வரிசைகள் தோன்றின. அவளது முக்கண்கள் அக்கினி தேவனது ஒளியினால் பிரகாசித்தன. வாயுவின் அம்சம் அவளது காதுகளாக மாறி அழகு செய்தது. இத்தகு தேஜஸ் யாவும் ஒருங்கே சேர்ந்தமைந்து உருவான அத் தெய்வீகப் பெண்ணுக்கு ஈசன் சூலத்தையும் மகா விஷ்ணு சக்கரத்தையும், வருணன் சங்கையும், பாசத்தையும் வாயு வில்லும் பாணங்களையும் இந்திரன் வஜ்ராயுதத்தையும், இயமன் தண்டத்தையும், பிரமன் அட்சமாலை மற்றும் கமண்டலுவையும், காலன் கத்தி, கேடயம் இரண்டையும் ஆயுதங்களாக அளித்தனர். குபேரன் என்றும் குறையாத மதுபாத்திரத்தை அளிக்க ஆதி கேசன் மணிகளால் அலங்கரித்த நாக மாலையை அவளுக்கு அணிவிக்க இயமதேவன் சிம்மத்தை வாகனமாக அளித்து இரத்தினங்களையும் வழங்கி அவளை சர்வ ஆபரண பூஷிணயாக்கிய பொழுது மும் மூர்த்திகளும் தேவர்களனை வரும் மகிழ்ந்தனர்.

**மகிஷாசுர சங்காரம்**

இவ்வாறு தேஜஸ் வரூபிணியாக உருவான அத் தெய்வப்பெண் மகிஷாசுரனுடன் கடுமையாகப் போர் தொடுத்து அந்த அசுராஜனை வதம் செய்தாள் அவனது சிரத்தை தன் காலடியில் கிடத்தி அதன்மீது மகிஷாசுர மர்த்தினியாக நின்றாள். இத்தகு மகா சக்தியே முதல் மூன்று தினங்கள் துர்க்கை மத்தியிலுள்ள மூன்று தினங்கள் லட்சுமி, முடிவிலுள்ள மூன்று தினங்கள் சரஸ்வதிக்கும் உரிய தினங்களாக அமைகின்றன. எனவே நவராத்திரி நாயகிகளை நாமும் சரண்புகுந்து வாழ்வோமாக.

# ‘எங்கட புத்தகங்கள் இல்லத்தில்’ இலக்கியமாலை

யாழ்ப்பாணம், செப்.22

பரிசில் வாழும் பிரபல எழுத்தாளர்கள் வி.ரி. இளங்கோவன், பத்மா இளங்கோவன் தம்பதியரின் ஐந்து நூல்களின் வெளியீட்டு நிகழ்வான ‘இலக்கியமாலை’ நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர்மடம் அம்மன் வீதியில் (18/2 இலக்கம்) அமைந்திருக்கும் ‘எங்கட புத்தகங்கள் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையிலான நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை இளம் ஆய்வாளர்கள் மாதவி உமாசுதசர்மா, சின்னராஜா விமலன், ச.சத்தியதேவன் ஆகியோரும் ஏற்புரைகளை நூலாசிரியர்களும் நிகழ்த்துவர். கலாசார உத்தியோகத்தர் சுபா. தனுஜன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



## ஈழமும் தமிழகமும்...!

'தாய்ப்பாசம் காட்டிய தலைவனை இழந்து தவிக்கும் ஈழத்தமிழர்களுக்காக குரல்கொடுக்க வேண்டியது தமது கடமையல்லவா' என்று தெரிவித்திருக்கின்றார் தமிழக வெற்றிக்கழகத் தலைவரான விஜய். இலங்கையில் மட்டுமல்லாமல், உலகெங்கும் பரந்துவாழும் அத்தனை சொந்தங்களுக்காகவும் - தொப்புள்கொடி உறவுகளுக்காகவும் தமிழக வெற்றிக்கழகம் நிற்கும் என்றும் அவர் கூறியுள்ளார். விஜய் ஒரு நடிகர் என்பதற்கு அப்பால், தற்போது தமிழகத்தின் அதிக ஈர்ப்புமிக்க அரசியற்கட்சியொன்றின் தலைவர். எதிர்வரும் ஆண்டு தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தலில், தவிர்க்கமுடியாத சக்தியாக விஜய் இருப்பார் என்று பல கருத்துக் கணிப்புகள் வெளிப்படுத்துகின்ற பின்னணியில், அவரின் கருத்துகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

தமிழகத் தலைவர்கள் பலரும் ஈழ ஆதரவு நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றனர். திராவிடம் என்றும், தேசியம் என்றும், பழமைவாதம் என்றும் தமக்குள் அவைபிரிந்துகொண்டாலும், ஈழத்தை ஆதரிப்பதிலும், ஈழத்தமிழர்களை அரவணைப்பதிலும் அந்தக் கட்சிகள் அனைத்தும் ஒற்றைப்புள்ளியில் சந்திக்கின்றன. அவ்வாறானதொருபாதையைவிஜய்தேர்ந்தெடுத்தமை மகிழ்ச்சிக்குரியது வரவேற்கத்தக்கது. ஆனால், காஸா போன்று உலகில் ஏதேனும் படுகொலைகள் நிகழ்கின்ற தருணத்திலும், தேர்தல் காலத்திலும் மட்டும்தான் அந்தக் கட்சிகள் அனைத்தும், ஈழத்தமிழர்களுக்கான அரசியலை 'பொது வெளியில் முன்னிறுத்துகின்றன' என்பது நீண்டகாலக் குறையாகவும் குற்றச்சாட்டாகவுமே இருந்துவருகின்றது. ஈழத்தமிழர்களுக்காக தற்போது ஒலிக்கும் ஆதரவுக் குரல்கள், எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின்னர் தொடர்ந்தும் முன்வைக்கப்படுமா என்றால், அது சந்தேகம்தான். ஈழத்தமிழர்கள் எனும் படர்கொடிகளுக்குக் கிடைத்த, மிகப்பெரும் கொழுகொம்புகள்தான் தமிழக உறவுகள். எனவே, ஈழத்தமிழர்கள் மீதான பற்றை பிடிமானத்தைத் தமிழகம் தளர்த்திவிடக்கூடாது. அது எப்போதும் ஒரே மாதிரியாகவும் - பேசுபொருளுக்கு உட்பட்டதாகவுமே இருக்கவேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு தமிழகத்தில் ஈழம் தொடர்பான கருத்தாடல்கள் வலுப்பெறுகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு அது நல்லது.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின்போதும், அதற்குப் பின்னரும் இடம்பெயர்ந்த பல்லாயிரம் ஈழத்தமிழர்கள் தற்போதும் தமிழகத்தில் அகதிகளாக வாழ்ந்துவருகின்றனர். முப்பது வருடங்களுக்கும் மேலாகத் தமிழகத்தில் வசிக்கின்றபோதிலும், அவர்களுக்குக் குடியுரிமை என்பது தொடர்ச்சியாக மறுக்கப்பட்டேவருகின்றது. எனவே, அவர்களின் விடிவுக்காகவும் - குடியுரிமைக்காகவும் குரல்கொடுக்க வேண்டியது தமிழகத் தலைவர்களின் பிரதான பொறுப்பும் கடமையுமாகும். அரசியற்பேதங்களுக்கு அப்பாற்பட்டு, பொதுவான கருத்தியலாக இந்த விடயத்தை முன்னிறுத்தும்போது நிச்சயம் அவர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கவே செய்யும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

**நாளொரு நல்வார்த்தை**

எதற்காகவும் வருத்தப்படாதே. வருத்தம் கோபத்தை உண்டாக்குகிறது; கோபம் வெறுப்பை கிளருகிறது; வெறுப்பு விரோதமாக மாறுகிறது; விரோதம் பகையாகிவிடுகிறது; வருத்தம் தோன்றும்போதே அதை அலட்சியப்படுத்திவிடுங்கள்.

– கதே–



## ஒரு வருட காலத்தில் 112 துப்பாக்கிச்சூடுகள்



கொழும்பு, செப். 22

**2024ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதி முதல் 2025 செப்ரெம்பர் 17ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் 112 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 57 பேர் உயிரிழந்துள்ளனர். 53 பேர் காயமடைந்துள்ளனர்.**

இந்தக் காலப்பகுதியில் 2ஆயிரத்து 500 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தக் குற்றங்களில் தொடர்புடைய குற்றச்சாட்டுகளில் 434 பொலிஸ் அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய 50 துப்பாக்கிதாரிகள், 37 வாகன ஓட்டுநர்கள் மற்றும் 322 குற்றங்களுக்கு உடந்தையாக இருந்ததாக சந்தேகிக்கப்படும் 409 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. s(ச-இ)

## கரந்தெனிய பிரதேசசபைத் தவிசாளர் காலமானார்

கொழும்பு.செப்.22

கரந்தெனிய பிரதேச சபைத் தவிசாளர் மஹீல் முனசிங்க திடீர் உடல் நலக் குறைவால் நேற்றுக் காலமானார்.

உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தபோது அவர் சுகவீனமடைந்த நிலையில் கரந்தெனிய பொரலந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

தேசிய மக்கள் சக்தி கட்சியைப்பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட கரந்தெனிய பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். (ச)

## கொழும்புத் துறைமுகத்தில் இந்தியக் கப்பல் நங்கூரம்

கொழும்பு, செப். 22

இந்தியக் கடற்படைக் கப்பலான 'INS SATPURA' எனும் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

விநியோகம் மற்றும் சேவைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நேற்றுமுன்தினம் வருகைதந்த குறித்த கப்பலுக்கு இலங்கைக் கடற்படையால் சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட்டது. (ச-இ)

## போக்குவரத்து உரிமம் சாரதிகளுக்குக் கட்டாயம்

கொழும்பு.செப்.22

பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பொதுப் போக்குவரத்து உரிமத்தைப் பெறுவது கட்டாயம் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சாரதிகளுக்கு ஆசனப்பட்டிகள் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பொருத்தமானவர்களை பொதுப் போக்குவரத்துச் சேவைக்கு இணைக்க நாங்கள் முடிவுசெய்துள்ளோம். அதனால் மக்களை ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு சாரதியும் பொதுப்போக்குவரத்து அனுமதி உரிமத்தைப் பெற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (க-இ)

## தலைமைத்துவம் ரணிலே பொருத்தம்

### மேர்வின் புகழாரம்



கொழும்பு, செப். 22

ரணில் விக்கிரமசிங்கவே சிறந்த தலைவர். அவரின் தலைமைத்துவம்தான் சிறந்தது என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். பங்களாதேஷ் மற்றும் நேபாளத்தில் ஏற்பட்டது போன்ற அராஜக நிலை இலங்கையில் ஏற்படாமல் தடுத்த தலைவர்தான் ரணில் விக்கிரம சிங்க. அவர் சவால்களுக்கு மத்தியில்தான் ஜனாதிபதிப் பதவியை ஏற்றார். அவரின் தலைமைத்துவம்தான் சிறந்தது.

அந்தத் தலைவரின்கீழ்தான் சஜித் இணையவேண்டும். வேறு தலைவர்கள் இங்கு கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

**நாளை**
செவ்வாய்க்கிழமை - புரட்டாதி 7
23.09.2025
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 03.02 - 04.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. மேற்குப் பிரதேசத்தில் நீரை உறிஞ்சும் படையினர்

## நீர்வளத்துக்குப் பெரும் பாதிப்பு என பிரதேசசபையில் சுட்டிக்காட்டு


**யாழ்ப்பாணம்,செப்.22**

**வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் மக்களுக்கே நீர்ப்பற்றாக்குறை நிலவும் நிலையில், கடற்படையினரும் இராணுவத்தினரும் தினமும் லீற்றர் கணக்கில் நீரை வெளியே எடுத்துச்செல்கின்றனர். இதனால் பிரதேசத்தின் நீர் வளத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் ஐ.நாகரஞ்சினி சுட்டிக்காட்டியுள்ளார். வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில், தனது பிரேரணையை முன் வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
அராலி ஆலடிப் பகுதியில் உள்ள வயற்காணியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து, அராலித்துறை இராணுவ முகாமுக்கு தினமும் மூன்று தடவைகள் 30 ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான நீர் எடுக்கப்படுகின்றது. இராணுவத்தினர் தினமும் நீர் எடுப்பதால் கிணற்று நீர் உவர் நீராக மாறியுள்ளது. அயலில் உள்ள கிணற்று நீரும் மாற்றமடைந்து வருகின்றது. இதனால் விவசாயமும் பாதிப்படையக்கூடிய அபாயம் உள்ளது.
அதேவேளை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதியில் அமைந்திருக்கும் முன்பள்ளி வளாகத்தில் உள்ள கிணற்றிலிருந்து கடற்படையினர் தினமும் நீரை எடுத்துச்செல்கின்றனர். இதனால் கிராமத்தின் நீர் வளம் பாதிக்கப்படுகின்றது.
பிரதேச மக்கள் கட்டணம் செலுத்தியே பிரதேசசபையிடமிருந்து நீரைப் பெறுகின்றனர். இருப்பினும் பிரதேசசபையால் மக்களுக்கான நீர்த்தேவையை முழுமையாகப் பூர்த்திசெய்யமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.
இந்தநிலையில் படையினரும் நீரை அகத்துறிஞ்சுவதால் கோடை காலத்தில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை தலைதூக்கும். இதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்- என்றார். (ச-க-27)



யாழ்ப்பாணம் - வடமராட்சி வல்லிபுரம் ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் கொடியேற்றம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-41-27-66)



## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.22
கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் கே.கே.தவகீஸ்வரன் தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு தவத்திரு சிவயோகசுவாமிகள் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம்கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்வி அலுவலக, தாபனம் மற்றும் பொதுநிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவசம்பு மதியழகன், கௌரவ விருந்தினர்களாக காப்புறுதிப்பிரிவு, தனியார் வங்கி வடக்குக் கிழக்குப் பிராந்திய முகாமையாளரும் பழையமாணவர் சங்கச் செயலாளருமான எப். எக்ஸ்.மயூரன், யாழ். கமநல அபிவிருத்தித் திணைக்கள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரும் பழையமாணவர் சங்க உறுப்பினருமான த. றூபராஜன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ச-41)

## கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், செப்.22
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சமூக விஞ்ஞானத்தில் உயர்தரச் தரச்சான்றிதழ் 2025 /2026 கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப் பிக்க விரும்புவோர் தரம் 9 இனைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும், 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணபப்பபடிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 30ஆம் திகதி வரை விண்ணப்பிக்கமுடியும். (ச-41)

### புமுதியாறுக் குளத்தில்

## சூரிய மின்கலம் மூலம் ஏற்று நீர்ப்பாசனத்திட்டம்

கிளிநொச்சி, செப். 22
வட்டக்கச்சி மாயவனூரில் அமைந்துள்ள புழுதியாறுக் குளத்தினுடைய ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் பணிகளை துறைசார் அதிகாரிகள் நேற்று முன்தினம் நேரில்சென்று பார்வையிட்டனர்.
வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமரர் சு. பசுபதிப்பிள்ளையின் முயற்சியினால் இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் முதலில் உருவாக்கப்பட்டது. பின்பு அதற்கான மின்சார இணைப்புகளில் ஏற்பட்ட இடர்பாடு காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் சுமார் 12 மில்லியன் ரூபா செலவில் சூரிய மின்கல மூலம் இயங்கும் நீர்ப்பம்பிகள்மூலம் விவசாயிகளுக்கான உடனடி நீர் வழங்கும் திட்டப்பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடாக இந்தப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. (ச-27)





## தேசியமட்டப் போட்டியில் வேம்படி மகளிர் சாதனை

யாழ்ப்பாணம், செப்.22
தேசியமட்ட அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரியின் அணிகள் 3 போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்று சாதித்துள்ளன.
தனி நடனம், குழு நடனம், கட்டுரை வரைதல் ஆகிய போட்டிகளிலேயே முதலாம் இடத்தைப் பெற்று வேம்படி மகளிர் கல்லூரி சாதனை படைத்துள்ளது.
போட்டிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றன. (ச-41-555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிவாங்கலுக்கு முன்னுரிமை!

சந்திரிகா கவலை

கொழும்பு, செப். 22
நல்லாட்சியை முன்னெடுப்பதைவிடவும், பழி வாங்கும் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் முன்னுரிமை வழங்கிவருகின்றது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை நீக்கும் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டமை உட்பட சமகால நிலைமைகள் சம்பந்தமாக ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த இல்லத்தில் ஆயுட்காலம் வரையில் தங்கியிருப்பதற்கான அனுமதியைக்கோரி ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கத்துக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தேன். ஆனால் அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் பிரத்தியேகமாக தங்குவதற்கான சிறிய இல்லமொன்றைத் தற்போது பெற்றுக்கொண்டுள்ளேன். அங்கு, புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு இரண்டு மாதங்கள் தேவைப்படுவதால் அதுவரையில் அரச இல்லத்திலேயே தங்குவதற்கு அனுமதி கோரியுள்ளேன். பல நாடுகளில், இதை விட பல சலுகைகள் உள்ளன. இந்தியாவில் கூட, சிறந்த சலுகைகள் உள்ளன.

மேலும் அரசாங்கம் நல்லாட்சியை நிலைநாட்டி முன்னெடுப்பதிலும் பார்க்கவும் ஆட்சியை விட பழிவாங்கும் செயல்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றார்கள்.

அவர்களுடைய சொந்த அரசாங்கத்தில் ஊழலை எவ்வாறு தடுப்பது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. மோசடி செய்பவர்களைக் கைதுசெய்கின்றமை பற்றி மட்டுமே அவர்கள் தொடர்ந்து கூச்சலிடுகிறார்கள். நாட்டை வளர்ப்பது பற்றி அவர்கள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. - என்றார். (ச-இ)

# தட்டுப்பாடான மருந்துகளுக்கு எதிர்வரும் நவம்பருக்குள் தீர்வு

சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு,செப்.22**
**நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகள் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குப் பின்னர் கிடைக்கும் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டுக்கு நிதிப் பிரச்சினை காரணமல்ல. கொள்முதலில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான கொள்முதல் செயல்முறைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில மருந்துகள் தனியார் சந்தையில் கிடைக்காது. இதுபோன்ற பல சிக்கல்கள் உள்ளன. மருந்துப் பதிவின் போது வரம்பற்ற விலைகளைச் சமர்ப்பிப்பதன்மூலம், பதிவை நாங்கள் அனுமதிப்பதில்லை.

தெற்காசிய நாடுகளில் தற்போதைய சந்தை நிலைமையைக் கருத்திற் கொண்டு ஒரு குறிப்பிட்ட விலை வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை விரும்பாதவர்கள் மருந்துகளை விநியோகிக்கமாட்டார்கள். கேள்விகோரல் செய்யும் பொறுப்பை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடம் வழங்கியுள்ளோம்.

சுமார் 85 வீதம் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. நாம் ஏற்கனவே கொள்வனவு செய்த மருந்துகள் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குப் பின்னர் நாட்டை வந்தடையும் - என்றார். (க-இ)

## பணியாளர்கள் பற்றாக்குறை; ஊழல் விசாரணைகள் தாமதம்

கொழும்பு , செப். 22
இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் விசாரணை ஆணைக்குழுவில் பணியாளர் பற்றாக்குறை நிலவுவதனால் கடும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதுடன் விசாரணைகளில் தாமதமும் நிலவுவதாக ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவுக்கு 967 பணியாளர்கள் தேவைப்படும்நிலையில், தற்போது பாதிக்கும் குறைவான எண்ணிக்கையிலேயே பணியாளர்கள் உள்ளனர்.

இது, பெறப்பட்ட தகவல்களை மக்களுக்குத் தெரிவிப்பதிலும் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட அரச அதிகாரிகள் தமது சொத்து மற்றும் பொறுப்புப் பிரகடனங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## ஹிட்லரைப் போன்றே அநுரவின் ஆட்சியும்

கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு,செப்.22
கடும் சர்வதிகாரியான ஹிட்லர் ஜேர்மனில் அதிகாரத்தைக் கைப்பற்றியமைக்கும், தற்போது ஜே.வி.பி. ஆட்சியமைத்துள்ளமைக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. ஹிட்லருக்கும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் வேறுபாடுகள் இல்லை. இவ்வாறு பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை தொடர்ந்தும் ஜனநாயக நாடாகவே இருக்குமா அல்லது பாசிசவாதத்துக்கு இரையாகுமா என்ற அச்ச நிலைமை ஏற்பட்டுள்ளது. அண்மையில் ரணிலுக்கு நடந்தது. நாளை எமக்கும் நடக்கலாம். இந்த நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்படவேண்டும் - என்றார். (க-இ)



## வேடந்தாங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.22
சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வாரத்தின் 5ஆம் நாள் நிகழ்வாக இலக்கிய மற்றும் கல்வி, நூலக மேம்பாட்டுத் தினத்தை முன்னிட்டு வேடந்தாங்கல் நிகழ்வு நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் நகராட்சிமன்றத் தவிசாளர், செயலாளர், கணக்காளர், பொதுச்சுகாதாரப் பரிசோதகர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் நகராட்சிமன்ற உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-9)











## இனிய நந்தவனம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.22
ஆர்.சசிதேவி எழுதிய இனிய நந்தவனம் நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் எழுகமூளாய் மறுமலர்ச்சி மையத்தில் நடைபெற்றது.

முதற்பிரதியை மூளாய் கிராமஅலுவலர் சிவரூபன் பெற்றுக்கொண்டார். அதனை தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

சி. சிவமோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். இந்தியத் துணைத் தூதரக கலாசாரம், அபிவிருத்தி மேலதிக அதிகாரி ஸ்ரீ. சங்கரன் ராஜகோபால் கலந்து சிறப்பித்தார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐஸ், போதைமாத்திரையுடன் நீர்வேலியில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.22

ஐஸ் மற்றும் போதை மாத்திரையை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கோப்பாய் பொலிஸாரால் ஒருவர் நீர்வேலியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 4 கிராம் ஐஸ் மற்றும் போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. மோட்டார் சைக்கிளில் விற்பனை நோக்கத்துடன் போதைப்பொருள்களைக் கொண்டு சென்றபோதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் ஊரெழுவைச் சேர்ந்தவர் என்றும், சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப். 22

சக்தி வழிபாட்டின் முக்கியமான நிகழ்வான நவராத்திரி இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. மயிலிட்டி வீரமாணிக்க தேவன் துறை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் இன்று முதல் இடம்பெறவுள்ளன. நவராத்திரி பூசைகள் தினமும் மாலை 3 மணிக்கு இடம்பெறும். (ச-100)

**விதை நெல் விற்பனைக்கு**

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்ட
அதிகூடிய விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத
BG 34.6 விதை நெல் விற்பனைக்கு உண்டு.
(CR/45066) J-1

**077 659 2044**

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 02 • 04 • 1944

மறைவு 22 • 09 • 2017

### அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் (J.P)

(அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வு நிலை பொறியியலாளர் இ.போ.ச சின்னாலடி - காரைநகர்)

ஏணியாக நின்று எம்மை ஒன்றிவிட்ட
எங்கள் அன்பு நண்பனே வாழ்வுக்கு
இலக்கணமாய் எடுத்துக் காட்டாய்
வாழ்ந்து காட்டிய உத்தமரே
இவ்வுலகை விட்டு நீங்கள் சென்றாலும்
நிலையாக வாழ்ந்திடுவீர்கள் எம் மனதில்
என்றென்றும்
உம் பாதம் பணிந்து நிற்போம்
வாழ்த்திடுவீர் எமை என்றும்
பாரினில் தரம் உயர்த்திடவே

தங்கோடை
காரைநகர்

அன்புடன் அன்பு நண்பன்
இராசையா சற்குணராஜா

(CS 59446) E

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 02 . 04 . 1944

மறைவு 22 . 09 . 2017

### அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் (J.P)

(அகில இலங்கைச் சமாதான நீதவான், ஓய்வுநிலை பொறியியலாளர் இ.போ.ச சின்னாலடி, காரைநகர்)

ஏணியாக நின்று எம்மை ஏற்றிவிட்ட
எங்கள் அன்பு பெரியப்பாவே!
வாழ்வுக்கு இலக்கணமாய் எடுத்துகாட்டாய்
வாழ்ந்து காட்டிய உத்தமரே!
இவ்வுலகை விட்டு நீங்கள் சென்றாலும்
நிலையாக வாழ்ந்திடுவீர் எம் மனதில்
என்றென்றும்
உம்பாதம் பணிந்து நிற்போம்
வாழ்த்திடும் எமை என்றும்
பாரினில் உணர்ந்திடவே!

காரைநகர்

அன்புடன் பெறாமக்கள்

(CS 59445) E

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 02 . 04 . 1944

விண்ணில் 22 . 09 . 2017

### அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் (J.P)

(அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வு நிலை பொறியியலாளர், இலங்கை போக்குவரத்துச் சபை)

ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்தனவே!
அழியாமல் உங்கள் நினைவுகள்
எம் மனதில் ஆழமாய் ...
நிலைத்தே நிறைந்திருக்கும்!
என் அதிபர் சேவையில் ...
என்னை புகமுடனே
சேவை செய்ய வைத்த என் உயிர் நாயகனே!
ஐம்பத்தொரு வருடங்கள் - சிறப்பாக
நாம் சேர்ந்தே வாழ்ந்து வந்தோம்!
கண் இமைபோல் என்னைக்
காத்து வந்தவரே!

நெடுந்தூரம் எனை நீங்கி
ஓடி மறைந்ததென்ன?
உங்கள் நினைவில் வாடித்தவிக்கின்றேன்
நித்தம் உம்மைத் தொழுதே வாழ்கின்றோம்!
காவல் தெய்வமாம் ஞானவைரவரிடம்
எனை ஒப்படைத்துச் சென்றவரே!
சொந்தங்கள் எல்லாம் என்னைக் கைவிட்டுச்
சென்றனவே
உம் அருளால் ஞானவைரவரை
நித்தம் தொழுதே என் மனதைத்
தேற்றுகின்றேன்
அவர் அருளால் வாழ்கின்றேன்!

ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

உங்கள் பிரிவால் நீங்காத நினைவுகளுடன் வாழும்
உங்கள் ஆருயிர் மனைவி

(CS 59448) E

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 02 . 04 . 1944

மறைவு 22 . 09 . 2017

### அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் (J.P)

(அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வுநிலை பொறியியலாளர் இ.போ.ச, சின்னாலடி, காரைநகர்)


ஆண்டுகள் பல விரைந்து சென்றனவே!
நிலையான கல்வியை எமக்கு அளித்த
எம் குருவே! மாமாவே!
எமைப் பிரிந்து எங்கு சென்றீர்?
எங்கும் தேடுகின்றோம்!
காணவில்லை உங்களை
தேறவில்லை எம் இதயம்
ஆறாத்துயரில் அமிழ்ந்தே வாடுகின்றோம்
கண்ணில் நீர்மல்க அழுது புலம்புகின்றோம்
விரைந்தே வந்திடுவீர்
உமைத்தேடி அலைகின்றோம்!
எங்கள் குருவே! உம் பாதம் பணிகின்றோம்!

உங்கள் பாசமிகு பழைய மாணவர்கள்
காரைநகர்

(CS 59447) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ். மாவட்டச் செயலகம், சங்கானைப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், நடமாடும் சேவை சங்கானைப் பிரதேச செயலர் திருமதி கவிதா உதயகுமார் தலைமையில் சங்கானைப் பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-25,9)

# வறுமை ஒழிப்புத் திட்டம் கிளிநொச்சியில் கருத்தரங்கு!

கிளிநொச்சி, செப். 22

'சமூக சக்தி வறுமை ஒழிப்பு' தேசிய வேலைத்திட்டம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத் திணைக்களத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் சாரஞ்சலி மனோகரன் வளவாளராக கலந்துகொண்டு திட்டம் பற்றி விளக்கமளித்தார். (ச-25,113)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையால் நடமாடும் சேவை மீசாலை கிழக்கு வட்டாரத்தில் முன்னெடுக்கப்பட்டது. நடமாடும் சேவையை நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ், உப தவிசாளர் ஞா.கிஷோர், செயலாளர் எஸ்.நிசான் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தனர். (ச-28)





உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சுற்றாடல் மற்றும் மரநடுகை தினமாக பிரகடனப்படுத்தப் பட்டப்பட்ட நாளில் பருத்தித்துறைப் பிரதேசசபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தை அண்டிய பகுதிகளில் பனம் விதைகள் நடப்பட்டன. நிகழ்வில் பருத்தித் துறைப் பிரதேசசபைத் தவிசாளர் யுகதீஸ், பருத்தித்துறைப் பிரதேசசபை உறுப்பினர் கணைச்செல்வன், பிரதேசசபை ஊழியர்கள், இராணுவத்தினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-27)





# உசன் இராமநாதன் ம.வி.யில் பரிசளிப்பும் திறப்புவிழாவும்

யாழ்ப்பாணம், செப். 22

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசில் நாள், புனரமைக்கப்பட்ட அலுவலகத் திறப்பு விழா மற்றும் நூற்றாண்டு விழா அங்குராப்பணம் என்பன பாடசாலை அதிபர் க.உமாபாலன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன. இதன்போது, க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் 9ஏ சித்திபெற்ற மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்கள், அகில இலங்கை கர்நாடக சங்கீத நடனப் போட்டியில் தேசிய ரீதியில் சாதனைபடைத்த மாணவர்கள், இணைப்பாட விதான செயற்பாட்டில் சாதித்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ச-25,159)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் வடக்குப் பிரதேசசபைக்கு உட்பட்ட காங்கேசன்துறைக் கடற்கரைச் சிறுவர் பூங்கா வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மரநடுகைத் திட்ட நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ச-66)





வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் 125ஆவது ஆண்டு விழாவும் நிறுவுநர் தினமும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றன. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டைதீவில்

# கிரிக்கெட் மைதானம் அவசியமா? உயிர்ப் பல்வகைமை அவசியமா?



வாசகர் திருமுகம்

மண்டைதீவில் கொண்டுவரப்படவுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானம் குறித்த சமீபத்திய அறிவிப்புகள், வடமாகாண மக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால் அதே சமயம் அங்குள்ள உயிர்ப் பல்வகைமையையும் அது பாதிக்கின்றது.

மண்டைதீவில் சர்வதேச தரத்தில் கிரிக்கெட் மைதானம் அமைக்கப்பட்டால், அது இளைஞர்களுக்கு கிரிக்கெட் வாய்ப்பை வழங்குவதுடன் மண்டைதீவுப் பகுதியின் வளர்ச்சிக்குத் துணையாக அமையும் என்பது உண்மை. ஆனால் சதுப்புநிலக் காடுகள் மற்றும் தாழ்நிலங்களைக் கொண்டிருப்பதால், மண்டைதீவுப்பகுதி அரிய கடல்வாழ் உயிரினங்கள், பறவைகள் மற்றும் உள்ளூர் மீன் இனங்களுக்கு முக்கியமான வாழ்விடமாக அமைவதனால் இங்கு கட்டப்படவுள்ள சுமார் 138 ஏக்கர் பரப்பளவிலான விளையாட்டு அரங்கம் இந்த இயற்கையான சூழலைச் சீர்குலைத்து, அந்தப் பகுதியின் உயிர்ப் பல்வகைமையை நிரந்தரமாகப் பாதிக்கும். அத்துடன், இறால், மீன்களின் பெருக்கத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி மீனவர்களின் பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன், திடீர் வெள்ளப்பெருக்கு மற்றும் கடல்நீர் உட்புகக்கூடிய அபாயமும் அதிகரிக்கும் என்பது மண்டைதீவு மக்களின் கருத்து. -ஸ்ரீ.ஜனுக்ஷி



பளை முகமாலை புனித ஆரோக்கிய மாதா திருத்தலத்தின் நவநாள் திருவிழாவின் இறுதிநாள் திருச்சொரூப பவனி நேற்று காலை இடம்பெற்றது. (ச-9)

# மின்சார சேவைகள் அத்தியாவசிய சேவை

## அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, செப்.22

மின்சாரம் வழங்கல் தொடர்பான அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கும் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மின்சாரசபை ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்து வரும் நிலையில் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியாகியுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் ஜனாதிபதியின் செயலாளரால் கையொப்பமிட்டு இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியாகியுள்ளது. (எ-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 06 . 1947

மறைவு 21 . 09 . 2025

## அமரர் கந்தையா தியாகராஜா

காரைநகர் களபூமி விளானையை பிறப்பிடமாகவும், களபூமி விளானை கொழுப்பு, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா தியாகராஜா அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (21.09.2025) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களை கந்தையா - சுந்தரம்மா தப்பதியினரின் மகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் கணவரும், காலஞ்சென்றவர்களை மார்க்கண்டு - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும், சுசீலாதேவி (Uk), விநாயகமூர்த்தி, விமலாதேவி (Uk), விக்னேஷ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவானந்தன் (Uk), கௌரி, ரவீந்திரன் (Uk) ஆகியோரின் அன்புத் மாமனாரும், ராகுல் (Uk). நிரோசனன், கோபீசன் (Uk). தக்ஷயா (Uk) ஆகியோரின் அன்பு பேரனும், தேவராசா, புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 500, மின்சார நிலைய வீதி, திருகோணமலை இல்லத்தில் வைக்கப்பட்டு அன்னரின் இறுதிக்கிரியைகள் (23.09.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01.00 மணியாவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளுமாறு கேட்டு கொள்கின்றோம்.

இல. 500 மின்சார நிலைய வீதி திருகோணமலை.

தகவல்
குடும்பத்தினர்
077 3026 271, 077 320 1004
மகனட - தி. விநாயகமூர்த்தி

## நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில்

# குண்டுவீச்சில் கொல்லப்பட்ட மாணவர்களுக்கு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப்.22

நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது இலங்கை விமானப்படையின் புக்காரா விமானங்கள் நடாத்திய குண்டுவீச்சில் படுகொலை செய்யப்பட்ட 21 பாடசாலை மாணவர்களின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வு பாடசாலை முன்றலில் அமைக்கப்பட்டுள்ள மாணவர் ஞாபகார்த்த நினைவுத் தூபியடியில் நடைபெறவுள்ளது.

1995 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் இலங்கை விமானப் படையினரின் புக்காரா விமானம் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த 21 மாணவர்கள் உள்ளிட்ட 39 பேர் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். 35க்கும் மேற்பட்ட மாணவர்கள் உட்பட 200 பேர் வரை இந்தத்தாக்குதலில் படுகாயமடைந்தனர். (எ-66)

**The Royal College of Jaffna**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில. வாரம் 3 வகுப்புகள். மாதக்கட்டணம் 7000/= By விக்கினேஸ்வரன் ஆசிரியர். 27 வருட அனுபவம். Diploma in English and Science London (M.L.S) வகுப்புகள்
சங்கானை யாழ்ப்பாணம் தொடர்பு: 077 675 1649

**பெண் பராமரிப்பாளர் தேவை**

நீர்வேலியில் வசிக்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு, பத்து மாதக் குழந்தையை காலை ஏழு மணி முதல் மாலை நான்கு மணி வரை பராமரிக்க, பெண் பராமரிப்பாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 184 4044

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1990 ல் பிறந்த மிருகசீரிடமுகாமைத்துவப் பட்டதாரி + பட்டய கணக்காளர் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை

தொடர்பு: 077 074 5206

**வேலைக்கு ஆட்கள் தேவை**

கொட்டல் மனேச்மன் பற்றி நன்கு தெரிந்த ஆட்கள் வேலைக்கு தேவை.

கொட்டல் அமைந்துள்ள இடம் - 3ம் குறுக்கு தெரு யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்
004 917 6621 45950
004 917 9170 1058
(Grmany Whatsapp)
076 923 0653

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த...

நடவடிக்கைகளில் 3 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான சட்டவிரோதச் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல், பெரியளவிலான மோசடி மற்றும் நிதி முறைகேடுகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துகளே அதிகம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தரவுகளின்படி பொலிஸாரால் 354 பவுண் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 72 சொகுசு மற்றும் பயன்பாட்டு வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 27 ஏக்கர் பரப்பளவு கொண்ட 35 சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவால் 67 கோடியே 84 லட்சத்து 10 ஆயிரத்து 387.81 ரொக்கத் தொகைகளையும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## கள்வர்களைப்...

தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சில அரசியல்வாதிகளிடம் கோடிக்கணக்கில் பணம் உள்ளது என்று கூறப்படுகின்றது. திருடாமல் அவற்றை அவர்கள் உழைத்திருந்தால் அதில் தவறில்லை.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சியின்போது கொண்டுவரப்பட்ட இலஞ்ச, ஊழல் ஒழிப்புச் சட்டத்தாலேயே இன்று கள்வர்களைப் பிடிக்க முடிந்துள்ளது. கள்வர்களைப் பிடிப்பது நல்ல விடயம்தான், ஆயினும் நாட்டை அபிவிருத்தி செய்வதும் முக்கியமானது - என்றார். (அ-எ-இ)

## பலஸ்தீனத்துக்கு...

கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் பலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் தமது தீர்மானத்தை இந்தத் தொடரில் அறிவிக்கவுள்ளன. இந்தநிலையில் பலஸ்தீன விடுதலைக்குரிய ஆதரவை இலங்கை ஜனாதிபதியும் வெளிப்படுத்துவார் எனத் தெரியவருகின்றது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் இன்று அமெரிக்கா நோக்கி பயணமாகின்றனர். இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கு பலஸ்தீன ஜனாதிபதிக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்துள்ளது. அதையடுத்து அவர் நிகழ்நிலை தொழில்நுட்பம் மூலம் உரையாற்றுவதற்கு அனுமதிக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியிருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இந்திய பிரதமர் மோடி உள்ளிட்ட உலகத் தலைவர்களுடன் இந்தப் பயணத்தின்போது அநுரகுமார திஸாநாயக்க இரு தரப்பு சந்திப்புகளில் ஈடுபடுவார். அதேபோல வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும் வெளிவிவகார அமைச்சர்களைச் சந்திக்கவுள்ளார். அத்துடன் அமெரிக்கா வாழ் இலங்கை சமூகத்தினரையும் ஜனாதிபதி அநுர சந்திக்கவுள்ளார்.

அமெரிக்காவில் இருந்து எதிர்வரும் 27 ஆம் திகதி ஜப்பானுக்கான தனது அதிகாரப்பூர்வப் பயணத்தை ஜனாதிபதி அநுர ஆரம்பிக்கவுள்ளார்.

28 ஆம் திகதி ஜப்பான் பிரதமர் மற்றும் ஜப்பான் பேரரசர் ஆகியோருடன் சந்திப்புகளை நடத்துவார். இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. எதிர்வரும் 30 ஆம் திகதி ஜனாதிபதி நாடு திரும்புவார். (அ-எ-44)

## அநுர...

ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஆண்டில் 1.048 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அந்நியச் செலாவணி பெறப்பட்டது. துறைமுகங்கள் தொடர்பான நிர்மாணப்பணிகள், சுற்றுலாத்துறை மற்றும் ரயர் தொழில் போன்றவற்றின் மூலமே பெரும் முதலீடுகள் கிடைத்தன.

கிடைத்த முதலீடுகளில் 65 சதவீதமானவை சர்வதேச ரீதியான முதலீட்டாளர்களால் வழங்கப்பட்டன. ஜனாதிபதியாக அநுரகுமார பதவி ஏற்ற காலத்தில் இருந்து 152 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்துள்ளனர் - என்றார். (அ-எ-இ)

## புதுக்குடியிருப்புப்...

ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இந்தப் படுகொலை நடந்தேறியது. சம்பவ தின இரவு புதுக்குடியிருப்பு கிராமத்துக்குள் புகுந்த இராணுவமும், இராணுவத்துடன் இணைந்த ஊர்காவல் படையும் வீடுகளின் உறங்கிக் கொண்டிருந்த தமிழ்மக்கள் 45 பேரை தூக்கத்திலிருந்து எழுப்பி விசாரணைக் கென கடற்கரைப் பகுதிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு வைத்து பெண்கள், குழந்தைகள் உட்பட 17 தமிழர்களை கூரிய ஆயுதங்களால் வெட்டியும், குத்தியும், துப்பாக்கியால் சுட்டும் கொலை செய்தனர். 9 ஆண்களும், 8 பெண்களும் கொல்லப்பட்டனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

நினைவேந்தல் நிகழ்வு கடற்கரை வீதியில் உள்ள நினைவுத் தூபியில் நடைபெற்றது. கொல்லப்பட்டவர்களுக்கு ஈகச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. 35 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் கொல்லப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்று உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (அ-எ-இ)

## போராட்டத்தைத்...

இலங்கை மின்சாரசபையின் மறுசீரமைப்புச் செயற்பாட்டில் முறைசாரா முன்மொழிவுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் கடந்த 17 நாள்களாக சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன. தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்தும் வகையில் நேற்று நள்ளிரவு முதல் கொள்முதல் மற்றும் கேள்விகோரல் செயல்முறைகளில் விலகவுள்ளதாக அவை அறிவித்துள்ளன.

இலங்கை மின்சாரசபையின் மறுசீரமைப்புச் செயற்பாட்டில் முறைசாரா முன்மொழிவுகள், ஊழியர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தும் சட்ட விரோத நடவடிக்கைகள், நிலுவையில் உள்ள ஊக்கத்தொகையை வழங்குதல் மற்றும் உரிய பதவி உயர்வுகளை வழங்குதல் உட்பட 16 கோரிக்கைகளை முன்வைத்து இந்தத் தொழிற்சங்கப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## மின்கட்டணம்...

ஒப்பிடும்போது மின்சாரசபைக்கான நிதிச் செலவுகள் 2.48 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது. இந்தநிலையில் தற்போது நட்டத்தில் இயக்குவதாகக் கூறப்படும் மின்சாரசபையால் மின்கட்டன உயர்வுக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மின்கட்டண உயர்வு தொடர்பாகப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தற்போது பொது மக்களின் கருத்துகளைப் பெற்றுவருகின்றது. இந்தநிலையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்குள் மின்கட்டணம் உயரலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது. (அ-எ-இ)

## மாகாணத்...

குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கத்தின் கடந்தகால நிலைப்பாடு மாகாணசபை முறைமைக்கு எதிராகவே இருந்தது என்றும், இந்த அரசாங்கம் மாகாண சபை முறைமையை விரும்பாத ஒன்றாகவே பார்க்கின்றது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக் கோரிக்கைக்கான முழுமையான வடிவமாக இல்லாதுவிட்டாலும், மாகாண சபை முறைமை இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஆரம்பமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட் டிய அவர்கள், மாகாண சபைத் தேர்தலை அரசாங்கம் தாமதமின்றி நடத்தவேண்டும் என்றும் வலியுறுத்தினர். (அ-எ-26)

## தியாகதீபம்...

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் வரலாற்றை எடுத்தியம்பும் ஆவணக் காப்பகம் திறக்கப்பட்டுள் ளது. தியாகதீபம் திலீபன் தொடர்பான தகவல்கள், அவர் உண்ணாவிரதம் இருந்த காலகட்டத்தில் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு கடந்தகால வரலாற்றை அடுத்த சந்ததிக்குக்கு ஊடு கடத்தும் வகையில் அந்த ஆவணக் காட்சியகம் தற்போது மூன்றாவது ஆண்டாக நடத்தப்படுகின்றது. இம்முறை தியாகதீபம் திலீபனின் உருவச்சிலையும் திறக்கப் பட்டது.

இந்த ஆவணக் காப்பகத்தைப் பெரும் எண்ணிக்கையான மக்கள் பார்வையிட்டு வரும் நிலையில், அரசியல் தலைவர்களும் கட்சி பேதமின்றி இந்த ஆவணக் காட்சியகத்தைப் பார்வையிடுவதுடன், தியாகதீபம் திலீபனுக்கும் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று ஆவணக் காட்சியகத்தை நேரில் சென்று பார்வையிட்டார். அங்குள்ள தியாக தீபம் திலீபனின் உருவச்சிலைக்கும் அஞ்சலி செலுத்தினார். அங்குள்ள நினைவுக் குறிப்பேட்டில் அவர், "திலீபன் நினைவாலயம் தொடர்ந்து தமிழ்மக்களது வரலாற்றில் இன்றியமையாத இடத்தைப் பெறவேண்டும். தனது இனத்துக்காகத் தன் இன்னுயிரை ஆகுதியாக்கிய இந்த தியாகம் இந் நாட்டில் தமிழ்மக்கள் வாழும் காலம் முழுவதும் பேசப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவனும் ஆவணக் காட்சியகத்தை நேரில் சென்று பார்வையிட்டதுடன், திலீபனின் உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார். (அ-எ-66-26)

## அநுரகுமார...

சிவில் சமூக கூட்டமைப்பின் புதிய அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஒழிக்கப்படும் என்றும், நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தின் முரணான விதிகளை திரும்பப் பெறப்படும் என்றும், ஒரு சுயாதீனமான வழக்குத்தொடுநர் அமைப்பு நிறுவப்படும் என்றும் வாக்குறுதியளித்திருந்தது. ஆனால் பதவிக்கு வந்து ஒரு ஆண்டு கடந்துள்ளபோதும் அடக்குமுறைகள் நீடிப்பதோடு, புலனாய்வாளர்களின் கண்காணிப்புகளும் தொடர்கின்றன. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர்ந்து துன்புறுத்தல், கண்காணிப்பு மற்றும் சட்டரீதியான அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக் கின்றனர்.

சிவில் சமூக அமைப்புகள் உளவுத்துறை சேவைகளால், பிரதானமாக நிதி தொடர்பாக, கடுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. அத்துடன் அவை செயற்பட பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டியுள்ளது. இவ்வாறான இராணுவமயமாக்கப்பட்ட மேற்பார்வை எதிர்ப்புக் குரல்களை அடக்குவதற்கும், அவ்வாறான குரல்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதோடு சர்வதேச கடமைகளை நேரடியாக மீறுகின்றன. அதே போன்று ஊடகவியலாளர்களில் பிரதானமாக தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்குதல்கள் மிரட்டல்களையும் எதிர்கொண்டுள்ளனர். இன்னும் சிலர் கண்காணிப்புக்குள் காணப்படுகின்றனர்.

ஆயுத மோதலின்போது நடந்த பெரும் அட்டூழியங்கள் தொடர்பாக ஐ.நாவின் ஏராளமான சான்றுகள் உள்ளபோதும், அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை அரசாங்கம் தொடர்ந்து எதிர்க்கிறது. அரசாங்கம் அரசியல் ரீதியான சீர்திருத்த வாக்குறுதிகளை வெளிப்படுத்தினாலும், இலங்கை அடக்குமுறை கலாசாரத்தில் இருந்து முழுமையாக விடுபட வில்லை. அந்தக் கலாசாரம் ஆழமாக வேரூன்றி உள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## கச்சாயில்...

முற்பகல் நடந்துள்ளது. உயிரிழந்த பெண்ணும், இன்னுமொருவரும் கச்சாய் வீதியூடாகக் கொடிகாமம் நோக்கிப் பயணித்தபோது, அதேதிசையில் பயணித்த மணல் ஏற்றிய உழவுஇயந்திரம் மோதி விபத்து நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மிருசுவிலைச் சேர்ந்த ந.ஜெயலக்சுமி (வயது-46) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கியில் பயணித்த மற்றொருவரான 22 வயதுடைய இளைஞர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.


விபத்தை ஏற்படுத்திய உழவியந்திரத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-28-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள் ஐ. சிவசாந்தன்



# தியாகதீபம் திலீபனின் 7ஆம் நாள் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், செப்.22
தியாகதீபம் திலீபனின் 7ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாகதீபத்தின் நினைவிடத்தில் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது சுடரேற்றி, திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-41-66)

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
OCTOBER INTAKE | 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த,பழக விரும்பும் ஆண் / பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 456 9678
(CS 59440) E

TECHNO WORLD
A/L தொழில்நுட்பக் கல்லூரி
10 வது வருடத்தில் தடம் பதிக்கின்றது
A/L 2025 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய
விசேட செயலமர்வு
27,28,29 September 2025
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
30,01,02 October 2025
பொறியியல் தொழில்நுட்பவியல்
உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
03,04,05 October 2025
ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்
காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.15 மணிவரை
இடம் :- வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 017 5346
(CR/46099)JK

# மந்திரிமனை முன் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், செப்.22
மரபுரிமைச் சின்னமான மந்திரிமனையைச் சீரமைப்பதற்கு இடமளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இன்று காலை, நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனையின் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்ட தன்னார்வலர்களால் இன்று காலை 8 மணிக்கு இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
மரபுரிமைச் சின்னமான மந்திரிமனையின் ஒரு பகுதி சில நாள்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை காரணமாக இடிந்து வீழ்ந்துள்ளது. மந்திரிமனையைப் பாதுகாக்க வேண்டும் என்று பல தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ள போதும், மந்திரிமனை அமைந்துள்ள காணியின் உரிமையாளர் அதற்கு ஒத்துழைக்காததால் மந்திரிமனை அழிவடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.
இதற்குக் கண்டனம் தெரிவித்தும், மந்திரிமனையைப் பாதுகாப்பதற்கு இடமளிக்கவேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# 'மருதங்களின் சமர்'
## முருகானந்தாக் கல்லூரி மகுடம்

கிளிநொச்சி, செப்.22
'மருதங்களின் சமர்' ஆண்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்டத்தொடர் ஆண்களுக்கான போட்டியில் முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி வெற்றியீட்டியது.
மருதங்களின் சமர் என்று வர்ணிக்கப்படுகின்ற பூநகரி மத்திய கல்லூரி அணிக்கும் முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி அணிக்குமிடையிலான மென்பந்துத் துடுப்பாட்டப்போட்டியின் இரண்டாவது பருவகாலம் பூநகரி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.
20 ஓவர்களைக் கொண்டதாக அமைந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பூநகரி மத்திய கல்லூரி அணி 18.1 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 108 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.
109 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய முருகானந்தாக் கல்லூரி அணி 11.1 களிலேயே 5இலக்குகளை இழந்தநிலையில் நிர்ணயிக்கப் பட்ட வெற்றியிலக்கையீட்டி 5இலக்குகளால் வெற்றிபெற்று மகுடம் சூடியது. (ச-40,113)




# மரண அறிவித்தல்

பிறப்பு
01 . 01 . 1937



இறப்பு
19 . 09 . 2025

## விசுவலிங்கம் யோகராசா

களவாவோடை ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வாழைச்சேனை, கொழும்பு, மானிப்பாய் வடக்கு ஆகியவற்றை வதிவிடமாகவும் கொண்ட அமரர் விசுவலிங்கம் யோகராசா அவர்கள் 19.09.2025 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம், இராசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், மானிப்பாய் வடக்கை சேர்ந்த காலஞ்சென்ற சபாபதி, சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் மகேஸ்வரராசா, கனகம்மா, பரமேஸ்வரி, யோகேஸ்வரி காலஞ்சென்ற மகிழ்ராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். சுரேஸ், சுமதி, சுபாஜினி, சுகிர்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் சித்திரா, காண்டீபன், பவகரன், சாம் தினேஷ் ஆகியோரின் அன்பு மாமனாரும் அனீசன், அபிர்தன், அபிசரன்,சகானா, சினேகா, சஜானா, ஆதித், அபிராம், அஸ்வின், நேசிக்கா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரிகைகள் உடுவில் வீதி மானிப்பாய் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் 23.09.2025 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் கிரிகைகள் நடைபெற்று பின்னர் பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : குடும்பத்தினர்
தொலைபேசி எண் சுரேஸ் 076248 1362 சுகி 0777066090


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org